1990 மே, 2]

கால்நடை மருந்தகம்.

*5761 திரு. ஆர். வரதராஜன்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சேலம் மாவட்டம், சங்ககிரி ஒன்றியம், தேவூர் பகுதியில் கால்நடை மருந்தகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

தற்போது இல்லை.

திரு. ஆர். வரதராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்ககிரி ஒன்றியம் தேவூர் பகுதி விவசாயிகள் அதிகமாக இருக்கின்ற பகுதி. அங்கே கால்நடைகள் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், கால்நடைகளுக்குப் போதிய சிகிச்சைகள் செய்ய முடியாத நிலையில் இருக்கின்ற காரணத்தினால் அருகிலுள்ள பத்து கிலோ மீட்டர் தூரத்திலுள்ள எடப்பாடிக்கோ அல்லது குமாரபாளையத்திற்கோ சென்று கால்நடைகளுக்குச் சிகிச்சை அளிக்கின்ற காரணத்தினால், விவசாயிகள் பெரிதும் அவதிக்குள்ளாகிறார்கள். ஆகவே, அரசு அதனைப் பரிசீலனை செய்து அங்கு ஒரு கால்நடை மருந்தகம் அமைக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தற்சமயம் சங்ககிரி ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட பகுதியிலே சங்ககிரியிலே ஒரு கால் நடை மருந்தகமும், வடுகப்பட்டி, தேவூர், புல்லம்பட்டி ஆகிய ஊர்களிலே கிளை நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் எந்த ஊரில் கால்நடை மருந்தகம் அமைக்கப்பட வேண்டுமென்று, தன்னுடைய கோரிக்கையை உரிய தீர்மானங்களோடு அரசுக்கு அனுப்பி வைப்பார்களேயானால் அரசாங்கத்தின் மூலமாகக் கால்நடை மருந்தகங்கள் துவக்கப்படுகின்றபொழுது அந்தக் கோரிக்கையினுடைய அவசியத்தைக் கருத்திற்கொண்டு, அரசாங்கத்தினுடைய நிதி நிலைமைக்கேற்ப அது பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.